செய்தி வெளியீடு **நாள் : 12.7.2025**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் முன்னேற்றப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினர்.

சிஎம்டிஏ சார்பில் வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில், திருவான்மியூர் பேருந்து நிலையம், அடையாரில் உள்ள இந்திராநகர் மற்றும் காந்தி நகர் ஆகிய 2 நூலகங்களை "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (12.7.2025) சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் **கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின்** (Kolathur Ornamental Fish Trade Centre) முன்னேற்றப் பணிகளை மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் **திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள்** மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து சிஎம்டிஏ சார்பில் வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில், திருவான்மியூர் பேருந்து நிலையம், அடையாரில் உள்ள இந்திராநகர் மற்றும் காந்தி நகர் ஆகிய 2 நூலகங்களை "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், இ.ஆ.ப., சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர் திருமதி.விஜயகுமாரி, மண்டலக் குழுத்தலைவர் திரு.கூ.பீ.ஜெயின், துணை இயக்குநர் (பொது நூலகம்) திருமதி.தனலஷ்மி, மாநகராட்சி மண்டல அலுவலர் திரு.சுந்தர்ராஜன், மாமன்ற உறுப்பினர் திருமதி.சுதா தீனதயாளன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.